வகுப்பு : எட்டு

ஜனவரி மாதப் பாடப்பகுதி

பாடம் : 11 - தொடர்ச்சி

பாடி மகிழ்வோம் பாடல் (கைத்தொழில்) வாய்மொழி மட்டும்

இலக்கணம் : பெயரடை, வினையடை

பாடம் : 12

பாடி மகிழ்வோம் (பாடல்) மின்னி மின்னி வானத்தில்
வாய்மொழி மட்டும்

இலக்கணம் : (ல், ள, ழ) ஒலி வேறுபாடு

உரைநடை : வேளாண்மை

பாடம் : 13

உரைநடை : சித்தன்ன வாசல்

பாடி மகிழ்வோம் (பாடல்) மிக அழகு (வாய்மொழி மட்டும்)

Scanned with OKEN Scanner

## பாடு மகிழ்வோம் (பாடல்)

## கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ

— நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கனார்

Scanned with OKEN Scanner

# இலக்கணம்

## பெயரடை, வினையடை

**பெயரடை:** பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்துவது பெயரடை எனப்படும்.

**வினையடை:** வினைச் சொல்லின் பண்பை உணர்த்துவது வினையடை எனப்படும்.

I. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொல் பெயரடையா? வினையடையா? என எடுத்து எழுதுக.

1. பழமையான கட்டடம் – பெயரடை
2. உயரமான மரம் – பெயரடை
3. மெல்ல சிரித்தான் – வினையடை
4. நன்றாகப் பாடினான் – வினையடை
5. பெரிய நாடு – பெயரடை
6. அழகிய வீணை – வினையடை

II. பொருத்துக:

1. வெண்மையான – இருந்தது (5)
2. விரைவாக – வயல் (3)
3. பசுமையான – சாலை (4)
4. அகலமான – ஓடினான் (2)
5. சுவையாக – முயல் (1)

III. கீழ்க்காணும் விளக்கங்களை படித்து அதற்கான விடையைக் கண்டறிந்து எழுதுக.

1. 'நாய்' முதலெழுத்தை மாற்றினால் படுத்து உறங்கலா
   பாய்

2. 'புலி' இறுதி எழுத்தை மாற்றினால் குழம்பு வைக்கலாம். புளி

3. 'யானை' முதலெழுத்தை மாற்றினால் எலியைப் பிடிக்கும் பூனை

4. 'அன்பு' நடுவிலுள்ள எழுத்தை மாற்றினால் வில்லிலிருந்து புறப்படும் அம்பு

5. 'ஆண்டு' - நடுவிலுள்ள எழுத்தை நீக்கினால் ஒரு விலங்கைக் குறிக்கும். ஆடு

Scanned with OKEN Scanner

பாடம் - 12

பாடி மகிழ்வோம் (கைத்தொழில்) பாடல் (வாய்மொழி)

## மின்னி மின்னி வானத்தில்

மின்னும் மின்மினி போலவே
மின்னி மின்னி வானத்தில்
என்னை உற்றுப் பார்த்திடும்
சின்னச் சின்ன மீன்களே

என்ன அங்கே செய்கின்றீர்?
எப்படித் தான் நிற்கிறீர்?
அன்னை கழுத்தில் அணிந்திடும்
அழகு வைர மாலையில்

மின்னும் மணிகள் போலவும்
வெள்ளை முத்தைப் போலவும்
பொன்னும் பூவைப் போலவும்
மின்னிச் சிரிக்கும் மீன்களே

எட்ட நின்று பார்க்கிறீர்
இரவில் மேலே வருகிறீர்
பட்டப் பகலில் எங்குதான்
பறந்து செல்வீர் கூறுங்கள்

- பெ. தூரன்

Scanned with OKEN Scanner

# இலக்கணம்

## ஒலி வேறுபாடு (ல, ழ, ள)

**I நிரப்புக:**

1. சிலம்பம் ஒரு கலை.
   வயலில் களை பறித்தார்.
   கூடைகள் செய்யக் கழை பயன்படுகிறது.

2. கடல் அலையில் விளையாடினான்
   பாம்பு அளையிலிருந்து வெளியே வந்தது.
   அம்மா குழந்தையை அழைத்தார்.

— x —

**II நடுவில் உள்ள எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்குக.**




1. வால்
2. வாய்
3. வாழி
4. வாளி
5. வாழ்
6. வாடை
7. வாள்
8. வாதி
9. வான்
10. வாழை

Scanned with OKEN Scanner

# உரைநடை

## வேளாண்மை

ஈ விடை - விடை :

1. தொழில்களுள் முதன்மையான தொழில் எது?

விடை: தொழில்களுள் முதன்மையான தொழில் உழவு.

2. உழவுத் தொழிலை ஏன் சிறந்ததாகக் கூறுகிறோம்?

விடை: உலக மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை விளைவிப்பதால் உழவுத் தொழிலே சிறந்தது.

3. 'உலகம்' என்னும் தேருக்கு அச்சாணி என யார், யாரைக் கூறுகிறார்?

விடை: உழவுத் தொழில் செய்யும் உழவன், 'உலகம்' என்னும் தேருக்கு அச்சாணி என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

4. உழவுத் தொழிலில் சிறந்துள்ள நாடுகள் எவை?

* இந்தியா * அமெரிக்கா * பிரேசில் * சீனா
* இந்தோனேசியா

## பாடம் - 13

## உரைநடை

## சித்தன்னவாசல்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1 (குகை ஓவியங்கள், தாமரை மலர்கள், சித்தன்னவாசல்)

1. கலை கண்டு மகிழ்ந்த இடம் சித்தன்ன வாசல்
2. சித்தன்ன வாசலில் குகை ஓவியங்கள் உள்ளன.
3. குகையின் மேல்பகுதியில் காணப்பட்ட ஓவியத்தில் தாமரை மலர்கள் இருந்தன.

---

### பாடி மகிழ்வோம் - மிக அழகு (பாடல்)
(வாய்மொழி மட்டும்)

அன்னம் போல மிதந்து அசைந்தே
ஆற்றில் செல்லும் படகினும்
மின்னும் வானம் தனில் மிதக்கும்
மேகக் கூட்டம் மிக அழகாம்.

ஆற்றைக் கடக்க இருகரையை
அணைத்தே எழும்பும் பாலத்தினும்
காற்றில் கலையா வானவில்
நாணக் கோணம் மிக அழகாம்

- வயலூர் சண்முகம்

Scanned with OKEN Scanner